# கடன்

## உங்கள் பணத்தை நிர்வகித்தல் மெய்த்தகவல் தாள்



## கடன் என்றால் என்ன?

கடன் என்பது கடன் கொடுப்பவரிடமிருந்து நீங்கள் வாங்கும் பணமாகும். நீங்கள் அதை ஒத்துக்கொண்ட காலத்துக்குள் திருப்பித் தந்துவிட வேண்டும். நீங்கள் கடன் வாங்கிய பணத்தை வட்டி, கட்டணம் மற்றும் செலவுகளுடன் திருப்பித்தர வேண்டியதிருக்கும். சரியான நேரத்துக்கு நீங்கள் பணத்தைத் திருப்பித் தரவில்லையென்றால் கூடுதல் செலவுத்தொகை உண்டு.

கடன் கொடுப்பவர்கள் கடன் வழங்குவோர்கள் என்றும் அழைக்கப்படுவர். வங்கிகள், கிரெடிட் யூனியன், கட்டுமானக் கழகங்கள் மற்றும் பணம் கடன் தரும் நிதி நிறுவனங்கள் இவற்றில் அடங்கும். கடன் வழங்குவோர் பணத்தைக் கடனுக்குத் தந்து, வட்டி, கட்டணம் மற்றும் இந்த சேவைக்கான செலவுத்தொகையை வசூலித்துப் பணத்தைப் பெருக்குகிறார்கள்.

## வட்டி, கட்டணம் மற்றும் செலவுத்தொகைகள் என்றால் என்ன?

வட்டி என்பது கடனைப் பயன்படுத்துவதற்கு நீங்கள் தொடர்ந்து செலுத்தும் பணத்தொகையாகும்.

கட்டணமும், செலவுத்தொகையும் கடன் வாங்கிய பணத்துக்கு ஏற்படும் கூடுதல் செலவாகும். அவை மாதம் ஒருமுறையோ, ஆண்டுக்கு ஒருமுறையோ வசூலிக்கப்படும். இந்தச் செலவுகளில் பின்வருபவை அடங்கும்:

- உங்கள் கணக்கை வைத்திருப்பதற்கான மாதக் கட்டணம்
- சரியான நேரத்திற்கு நீங்கள் பணம் செலுத்தவில்லை என்றால் அதற்குரிய கட்டணம்
- நீங்கள் திருப்பித்தர வேண்டிய பணத்தைச் செலுத்தவில்லை என்றால் அதற்குரிய கட்டணம்

## கடன் சட்டம்

ஆஸ்திரேலியாவில் கடன் தருவோர் நுகர்வோர் கடன் சட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். இது ஆஸ்திரேலிய அரசினால் முறைப்படுத்தப்பட்டுள்ளது. பணத்தைக் கடன் வாங்குபவரும் இந்தச் சட்டத்தைப் பின்பற்ற வேண்டும்.

## கடன் வகைகள்

ஆஸ்திரேலியாவில் பல்வேறு கடன்வகைகள் உள்ளன. நீங்கள் பயன்படுத்தும் வகையானது நீங்கள் எதற்காகப் பணம் கடன் பெற்றிருக்கின்றீர்கள் என்பதைப் பொறுத்ததாகும். கடன் அட்டைகள், கார் கடன்கள், வீட்டுக் கடன்கள், கடை அட்டைகள், குறுகியகாலக் கடன்கள் மற்றும் நுகர்வோர் வாடகை ஆகியவை சில எடுத்துக்காட்டுகளாகும்.

## நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்

- கடன் என்பது திருப்பிச் செலுத்த வேண்டிய, நீங்கள் வாங்கிய பணமாகும்.
- கடனுக்குக் கூடுதல் செலவுகளும் உண்டு
- அதிகப்படியான கடன் பணப்பிரச்சினைகளை உருவாக்கும்

கடன் பற்றிய மேலதிக விவரங்களுக்கு, MoneySmart இணையதளமான www.moneysmart.gov.au என்ற முகவரிக்குச் செல்லுங்கள் அல்லது 1300 300 630 என்ற எண்ணுக்கு அழையுங்கள். அத்துடன் நிதித் தகவல் சேவை அலுவலரை 13 23 00 என்ற எண்ணில் அழைத்துக் கேட்டால் உங்கள் கடன் பயன்பாட்டை நன்கு நிர்வகிக்க உதவுவார்.

உங்கள் கடன் கோப்பைப் பெறுவதற்கு www.mycreditfile.com.au என்ற இணையதளத்துக்குச் செல்லுங்கள்.

MONEYSMART

### ஹுசேன் கார் கடன் பெறுகிறார்

ஹுசேன் ஏற்கனவே பயன்படுத்திய கார் ஒன்றை வாங்க விரும்புகிறார். பதிவுச்செலவு மற்றும் காப்புறுதிக் கட்டணத்தையும் (ஏறக்குறைய 1000 டாலர்கள்) உள்ளடக்க விரும்புகிறார். அத்துடன் அவர் 5000 டாலர்கள் வரை செலவு செய்ய வேண்டுமென முடிவு செய்கிறார். அதன் பொருள் காரின் விலை 4000 டாலர்களுக்கு மேல் செல்லக்கூடாது என்பதாகும். அவரிடம் எந்த சேமிப்பும் கிடையாது. ஆகவே பணத்துக்காகக் கடன் வாங்கத்தான் வேண்டும்.

சனிக்கிழமை காலை ஹுசேன் பயன்படுத்திய கார் ஒன்றைப் பார்ப்பதற்குக் கார் விற்பனைக் களத்துக்குச் செல்கிறார். அவருக்குப் பிடித்தமான ஒன்றை 3900 டாலர்கள் விலை அளவில் பார்க்கிறார். ஹுசேன் ஒரு விற்பனை அதிகாரியைப் பார்த்து காரைப் பற்றிய சில கேள்விகளைக் கேட்கிறார். ஹுசேன் அந்தக் கார் நம்பத்தகுந்ததா, எந்த வருடம் அது தயாரிக்கப்பட்டது மற்றும் அது ஓட்டுவதற்குப் பாதுகாப்பானதா என்பதைப் பற்றியெல்லாம் அறிய விரும்புகிறார். ஹுசேன் அந்தக் காரை வாங்க வேண்டுமென முடிவு செய்கிறார். ஹுசேன் கடனுக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் ஆனால் முன்னதாக சில கேள்விகளுக்கு அவர் பதிலளிக்க வேண்டுமென்ற கார் விற்பனைக்கள நிதி அலுவலர் சொல்கிறார்.

ஹுசேன் விவரங்களை நிதி அலுவலரிடம் கொடுக்கிறார். ஹுசேன் 4900 டாலர்கள் (பதிவுச் செலவையும், காப்புறுதிக் கட்டணத்தையும் அதில் செலுத்தலாம்) கடன் பெறமுடியும் என்று நிதி அலுவலர் அவரிடம் கூறுகிறார்.

கடன் ஒப்பந்தத்தை நிதி அலுவலர் ஹுசேனிடம் தந்து, அதைப் படித்துக் கையெழுத்திடச் சொல்கிறார். இருப்பினும் 'உனக்குப் புரியாத எதையும் நீ கையெழுத்திட வேண்டாம்' என்று ஹுசேனின் நண்பர் ஒருமுறை கூறியிருந்தபடியால், ஹுசேன் முழு ஒப்பந்தத்தையும் படித்துப் பார்க்க விரும்புகிறார். ஆகவே முன்னதாக படித்துப் பார்ப்பதற்கு வீட்டுக்கு எடுத்துச் செல்லலாமா என்று அவர் கேட்கிறார். நிதி அலுவலரை மறுபடியும் திங்கட்கிழமை சந்திப்பதற்கு அவர் ஒத்துக் கொள்கிறார்.

ஹுசேன் கடன் ஒப்பந்தத்தை படித்துவிட்டு நிதி அலுவலரைச் சந்திக்க மறுபடியும் கார் விற்பனைக் களத்துக்குத் திங்கட்கிழமை மீண்டும் செல்கிறார். கடன் ஒப்பந்தத்தைப் படித்தபின் ஹுசேனுக்குப் பல கேள்விகள் எழுகின்றன. அவர் நிதி அலுவலரிடம் மொத்த கடன் தொகை எவ்வளவு, வட்டி எவ்வளவு, திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை எவ்வளவு மற்றும் எப்படிச் செலுத்துவது, அத்துடன் கடன் ஒப்பந்தம் எவ்வளவு காலத்துக்கு என்பதைப் பற்றியெல்லாம் கேட்கிறார். ஹுசேன் விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளைப் பற்றி முழுவதுமாகப் புரிந்து கொண்டு, ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு காரை வாங்குகிறார்.

© ASIC 2012 அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை

This page has been intentionally left blank.

© ASIC 2012 அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை